**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாள் புதன்கிழமை

I.A.06/2024 in O.S. 30/2015

தனவேல் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. குருசாமி,
2. சாரதம். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 19.02.2026–அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.உத்திராபதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.R,சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் பிரமாணவாக்குமூலம் ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக கடந்த 26.02.2024 ம் தேதி மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய முடியாமல் போனதால் தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து தொடர்ந்து வழக்கை மேல்நடத்த உத்தரவாக வேண்டி சி.பி.சி.ஆர்டர் 9 ரூல் 9 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய கடந்த 26.02.2024 ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்த அன்று

விசாரணைக்காக வழக்கறிஞர் வர சொல்லியிருந்தார் என்றும், மனுதாரருக்கு கடந்த சில மாதங்களாகவே உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் நீதிமன்றம் வர முடியவில்லை என்றும், வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றி கேட்க முடியாமல் போய்விட்டது என்றும், இந்நிலையில் மனுதாரருக்கு உடல்நிலை சரியானதும் தனது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விவரம் பற்றி இன்று கேட்டபோது தான் மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய கடந்த 26.02.2024ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தாவா தள்ளுபடியாகிவிட்டது என விவரம் கூறினார் என்றும், மனுதாரர் வேண்மென்றோ, அலட்சியமாகவோ நீதிமன்றம் வராமல் இல்லை என்றும், இது தெய்வாதீனமாக நடந்த ஒன்று என்றும், மேற்படி வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், ஆகையால் கடந்த 26.02.2024ம் தேதி மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய முடியாமல் போனதால் தள்ளுபடியான வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து தொடர்ந்து வழக்கை மேல்நடத்த உத்தரவாக வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

3. மனு அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், தாவா ஒரு வருட காலமாக மனுதாரர் தரப்பில் ஆதரவு குறியீடு செய்ய காலஅவகாசம் இருந்து மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய இருந்தும் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வந்தார் என்றும், மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி 2021 ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், ஆனால் மனுதாரர் தரப்பில் கடந்த 26.02.2024 அன்ற மட்டுமே ஆஜராகாதது போல் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆகையால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டுமென்று எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டனர். எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிட்டனர்.

7. மனு, எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பு ஆகியனவற்றை பரிசீலனை செய்து பார்க்கையில் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு பின் விசாரணைக்கு வாய்தா மாற்றப்பட்டுள்ளது. பின்னிட்டு மேற்படி வாய்தா கடந்த 06.03.2021 அன்று விசாரணைபட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்பிறகு வாய்தா 24.03.2021 வாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வாய்தா மாற்றப்பட்டு, வாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி பல வாய்ப்புகள் வழங்கியும் வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால் கடந்த 26.02.2024 அன்று வாதியின் தவறுகைக்காக மேற்படி வழக்கானது தள்ளுபடியாகியுள்ளது புலனாகிறது. தற்போது மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதை பார்க்கையில் அவர் அசல் வழக்கை மேல்நடத்த முன்வருவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்பதன்படி பார்க்கும்பொழுதும், இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேற்படி மனுதாரரின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவீனங்கள் ஏற்படக் கூடும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு, செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. **எனவே முடிவாக,** மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகை **ரூ.1,000/-**யை வரும் **10.06.2026**ம் தேதியன்று அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

வாய்தா அழைக்க.12.06.2026

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:**

- இல்லை -

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.